பணிப்புரை இல. 15

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

### 12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 12 (1) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2005, ஒகத்து 26 ஆந் திகதிய 1407/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 6 ஆம் இலக்க பணிப்புரையை இப்பணிப்புரையின் மூலம் இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

சரத் விஜேசிங்க,
தலைவர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை,
இல. 27, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2007, செத்தெம்பர் 04.

9-849/2

---

பணிப்புரை இல. 13

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

### 12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 12 (1) இன் கீழ் விதித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது வியாபாரி எவரேனும் தட்டையான மற்றும் வளைந்த அஸ்பெஸ்ரஸ் சீற்கள் என்பவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை நியம குறியீடுகளான எஸ்எல்எஸ் 9/1:2001 மற்றும் எஸ்எல்எஸ் 9/2:2001 ஆகியவற்றிற்கு அமைவாக அல்லாத எந்தவொரு தட்டையான மற்றும் வளைந்த அஸ்பெஸ்ரஸ் சீற்றினையும் தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு விடவோ முடியாது என பணிப்புரை விடுக்கின்றது.

இப்பணிப்புரையானது 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

சரத் விஜேசிங்க,
தலைவர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,
இல. 27, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2007, ஒகத்து 31.

9-849/3

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.